8. அறிவிப்புகள் (தொடர்ச்சி)—

(ஆ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : இன்று 23-3-84 கூடிய அலுவல் ஆய்வு குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் நடவடிக்கைகள் குறித்த நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப் பட்டுள்ளன என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

24-3-84—சனிக்கிழமை முதல் } ஏற்கனவே அறிவிக்கப்
28-3-84 புதன்கிழமை முடிய } பட்டபடி.
29-3-84 வியாழக்கிழமை
30-3-84 வெள்ளிக்கிழமை

ஆகிய கிழமைகளில் மானிய கோரிக்கை எண் 15—காவல்துறை எண் 16—தீ அணைப்புப் பணிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட படி. மற்றும் எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை.

31-3-84 ஏற்கனவே அறிவிக்கப்பட்ட எண் 35—நுகர் பொருள் வழங்கல் இந்த மானிய கோரிக்கைக்குப் பதிலாகக் கீழ்க்கண்ட மானிய கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படு கின்றன. மானிய கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம், எண் 14—சிறைச்சாலைகள்.

மற்ற மானிய கோரிக்கைகள் குறித்து பின்னர் அறிவிக்கப் படும்.

9. வரவு-செலவுத் திட்டம் 1984-85—வாக்கெடுப்பு— தொடர்ச்சி.

கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 30—சமூக நலன்—தொடர்ச்சி.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கை தொடர்பாக சில கருத்துக்களை இந்த மன்றத்தில் நான் வைக்க முற்படுகிறேன். சமுதாயத் துறையில் நலிந்தவர்கள் ஏற்றம் பெறுவதற்கு சில நல்ல திட்டங்களை இந்த அரசு இங்கே வைத்து இருக்கின்ற குறிப்புகளின் வாயிலாக அறிமுகம் செய்திருக்கிறது. நலிந்தவர்கள், வயது முதிர்ந்தவர்கள், விதவைகள், ஊனம் உற்றவர்கள் இவர்களுக்கு எல்லாம் பென்ஷன் வழங்குகின்ற திட்டத்தை இந்தக் குறிப்பில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது தொடர்பாக மதிப்பிற்குரிய நண்பர் திரு. முத்துக் கிருஷ்ணன் அவர்கள் பாராட்டிப் பேசினார்கள். ஏறத்தாழ 13 ஆயிரத்திற்கும் அதிகமான பேர்கள் இதனால் பயனடைந்து இருக்